★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
187, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
187, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 30 சனிக்கிழமை (14 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 49

# பூநகரிப் பாதையை திறப்பது குறித்து இன்றைய பேச்சில் இணக்கம் ஏற்படும்

## போர் இடைநிறுத்த நீடிப்பு, புனர்வாழ்வு, பொருளாதாரத் தடை நீக்கம் பற்றி முக்கிய முடிவு

யாழ்ப்பாணம், ஜனவரி 14

ஸ்ரீலங்கா அரசாங்கத் தரப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இன்று நடைபெறும் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது —

பூநகரி — சங்குப்பிட்டி பாதை திறப்பது குறித்து இரு தரப்பினருக்கும் இடையே ஓர் இணக்கம் ஏற்படும் என்று மிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

போர் இடை நிறுத்த நீடிப்பு, புனர்வாழ்வு — அபிவிருத்தி, பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகியன குறித்தும் இன்றைய பேச்சில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் நம்பப்படுகிறது.

இன்றைய பேச்சுக்களின் போது கடந்த 8 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள போர் இடை நிறுத்த ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் —

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டம் குறித்தும் — முக்கியமாக ஆராயப்படும்.

அத்துடன் புனரமைப்பு வேலைகளுக்கு பயன் படுத்தப்படும் பாரிய இயந்திரங்களை எடுத்ச் செல்ல வசதியாக ஆனையிறவுப் பாதையை திறப்பது குறித்தும் இன்றைய பேச்சுக்களில் விசேடமாக ஆராயப்படும்.

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குமாறு இன்றைய பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் வலியுறுத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாம் கட்டப் பேச்சுக்களை நடத்துவதற்காக அரச குழுவினர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி வந்து அங்கிருந்து ஹெலிமூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்வர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் தலைமைச் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கு தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தலைமை வகிப்பார். அவருடன் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன், தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் திரு. சு டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு. ரவி, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோரும் கலந்துகொள்வர்.

அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி தலைமை வகிப்பார். அவருடன் படை அதிகாரிக

(6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி படையினரை 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு நகர்த்த அரசு இணக்கம்

## 'ஐலண்ட்' பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜன. 14

சங்குப்பிட்டி - கேரதீவு ஊடான போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்கு வசதியாக —

பூநகரியில் உள்ள துருப்புக்களை சுமார் இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கோமர் முனையை (KOMAR POINT) நோக்கி — அம்முனைக்கு நெருக்கமாக — பின்னே நகர்த்த தயாராக இருப்பதாக அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துக்கு அறிவித்திருக்கிறது.

''த ஐலண்ட்'' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

அரசாங்கம் பூநகரிமுகாமை வாபஸ் பெற மறுத்துவிட்டது ஆனால் கோமர் முனைக்கு துருப்புக்களை பின்னோக்கி நகர்த்த அரசு முன்வந்துள்ளது.

பாதைப் போக்குவரத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு வசதியாக அப்பகுதியில் உள்ள வீதியிலிருந்து பின்வாங்கிச் செல்ல அரசு தயாராக இருப்பதாக இராணுவ அதிகாரிகளும் தெரிவித்தனர்

டாங்கிகள், ஆட்லறி தொகுதிகளுடன் ஆகக்குறைந்தது 5 ஆயிரம் துருப்புகள் பூநகரி— கோமர்முனைப் பகுதிகளில் உள்ளன. முல்லைத்தீவு, ஆனையிறவு, பூநகரிப்பகுதிக்குப் பொறுப்பான கட்டளையிடும் பொது அதிகாரியான மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கவின் கீழ் பிரிகேடியர் ஒருவர் கண்காணிப்பில் இப்பிரதேசம் உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சனிக்கிழமையன்று (இன்று) நடைபெறும் பேச்சுக்களின் போது —

பூநகரி — கோமர் முனையில் உள்ள துருப்புக்களின எதிர்காலம் குறித்து முடிவு செய்யப்படும் என அறியவருகின்றது.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ)

# அரசியல்தீர்வு குறித்த பேச்சுக்கள் அடுத்தமாதம் முதல் வாரம் நடக்கும்

கொழும்பு, ஜன. 14

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை அடுத்த மாதம் முதல்வாரத்தில் ஆரம்பிப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

— இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெறும் இறுதிப் பேச்சுவார்த்தையாக இன்றைய பேச்சுக்கள் விளங்கும் என்றும் —

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் திட்டத்தை அரசு தற்போது தயாரித்து வருகிறது. அடுத்த மாதம் முதல்வாரத்தில் அது பூர்த்தியாகிவிடும் — என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-ஐ-6)

# வடபகுதியை மீண்டும் கட்டி எழுப்ப புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டம்

## ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் கூட்டம்

கொழும்பு, ஜன. 14

வடபகுதியை மீண்டும்கட்டி எழுப்புவதற்கான அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

வடமாகாண புனர்வாழ்வுக்கான செயலணிக்குழு அதன் முதலாவது கூட்டத்தை நேற்று கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடத்தியது குழுவின் தலைவரான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்த பெரேரா ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி, திரு. நவின் குணரத்தின, திரு. ராஜன் ஆசீர்வாதம், திரு. சுரேன் விக்கிரமசிங்க மற்றும் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்புக்கான அவசர திட்டத்துக்கு நிதி திரட்டுவது குறித்து கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இது சம்பந்தமான ஆலோசனை அடங்கிய அறிக்கை கிடைத்ததும் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவது —

உற்பத்தியை [illegible] பித்து பொருளாதாரத்தை கட்டி எழுப்புவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

வடபகுதி மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கமாக கல்வி சுகாதாரத் துறைகள் புனரமைக்கப்படும்.

[illegible] சேவையை வழங்க [illegible]




திட்டங்கள் எல்லாம் நல்லது தான் பாருங்கோ செயற்படுத்தவும் வேண்டுமே...!

## இன்று கிளாலி-பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 14

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ 3)

## கிளாலி ஊடாகவும் செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 14

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச தரப்பினருக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள மூன்றாவது கட்டப் பேச்சுக்கள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக ஏழு செய்தியாளர்கள் வியாழன் இரவு கிளாலி மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் ஐ. ரி. என். தொலைக்காட்சி, ஏ எவ் பி. செய்தி ஏஜென்ஸி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் அடங்கி உள்ளனர்.

ஏனைய செய்தியாளர்கள் இன்று காலை ஹெலியில் வருகிறார்கள். (இ-4)

## இந்திய மீனவர் காப்பாற்றினர்

கொழும்பு, ஜன. 14

ஆழ்கடலில் தத்தளித்த நான்கு இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட நால்வரில் இருவர் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தன பிரசாத், சூட்டி, வசந்தா, சீலன் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

படகு விபத்துக்குள்ளாகி தத்தளித்த இவர்களை கன்னியா குமரிக் கடலில் இந்திய மீனவர்கள்பாதுகாப்பாக மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது (இ-3)

## ஜே. ஆர்.- சந்திரிகா சந்திப்பு

கொழும்பு. ஜன. 1

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்து உரையாடினார்.

இந்தப்பேச்சுக்களின் போது ஜெயவர்த்தன கலாச்சார நிலையம் பற்றி ஜே. ஆர். விளக்கமாக கூறினார். (ஐ-3)

## பாப்பரசர் சென்ற பாதையில் துப்பாக்கியுடன் நபர் கைது!

மணிலா, ஜன. 14

மாணிலாவில் பாப்பரசரின் வாகன அணி செல்ல இருந்த பாதையோரம் மறைந்திருந்த துப்பாக்கி நபர் ஒருவரை பிலிப்பீன்ஸ் பொலீஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வீதி ஓரங்களில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினரிடையே அந்த நபர் மறைந்திருந்த வேளை மடக்கிப் பிடிக்கப்பட்டார்,

ஜனாதிபதி பிடல் ராமோஸ் உட்பட மற்றும் உயர் தலைவர்களின் பாதுகாப்புக்கான விசேட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர் என அந்த நபர் தன்னை முதலில் பொலீஸாரிடம் அறிமுகப்படுத்தி தப்பிக் கொள்ள முயன்றார் என்றும் —

ஆனால் அதை உறுதிப்படுத்துவதற்கான அடையாள அட்டை எதனையும் அவர் வைத்திருக்கவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

அந்த நபர் பொலீஸாரால் பிடிக்கப்பட்ட சிறிது நேரத்தில் பாப்பரசர் பயணம் செய்த வாகன அணி அந்தப் பாதையை கடந்து சென்றது. (ஐ)

## பாப்பரசருக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி

கொழும்பு, ஜன. 14

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயத்தை பகிஷ்கரிக்குமாறு கோரும் சுவரொட்டிகள் பல கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

பௌத்த மதத்தை அவமதித்ததற்காக பாப்பரசர் பௌத்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது-

அதேவேளை —

பாப்பரசர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள காலப்பகுதியில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கு சில அமைப்புகள் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையுடம் இது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த கேணல்ரத்வத்தை —

தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. பாப்பரசரின் நிகழ்ச்சிகள் எவ்வித தடையும் இன்றி நடை பெறும்.

உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளைப் பாதிக்காத வகையில் எதிர்ப்புத் தெரிவிக்கவோ பேரணி நடத்தவோ அவருக்கும் உரிமை உண்டு - என்றார். (இ-ஐ-6)

## எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த பிக்குகள் முயற்சி

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரும் பரிசுத்த ப்பரசரின் வருகையை புறக்கணிப்பதில் பௌத்த மத மக்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பௌத்த குருமார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இன்றும், நாளையும் காலி, மாத்தறை, மொறட்டுவ ஆகிய இடங்களில் பொதுக் கூட்டங்களை நடத்தி பாப்பரசருக்கு எதிராக தாம் மக்களை திரட்டப்போவதாக பௌத்த மத சங்கம் தெரிவித்துள்ளது. (இ-3)

## கண்காணிப்புக் குழுக்கள் நான்காகக் குறைப்பு

கொழும்பு, ஜன. 14

வடக்கிலும் கிழக்கிலும் யுத்த இடைநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட இருந்த கண்காணிப்புக் குழுக்களின் எண்ணிக்கை 6 இல் இருந்து 4 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் இரண்டு கண்காணிப்புக் குழுக்களையும் வடக்கில் நான்கு கண்காணிப்புக் குழுக்களையும் நியமிப்பது என்று முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கமைய கிழக்கில் இரு கண்காணிப்புக் குழுக்கள் நோர்வே நாட்டவர்கள் தலைமையில் அனுப்பப்பட்டு இயங்கவும் ஆரம்பித்துள்ளன.

வடக்கே நியமிக்கப்பட இருந்த நான்கு கண்காணிப்புக் குழுக்களுக்குப் பதிலாகவே இரண்டு கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

இதில் ஒரு குழுவுக்கு நெதர்லாந்து நாட்டுப் பிரதிநிதியும் மற்றைய குழுவுக்கு கனடா நாட்டுப் பிரதிநிதியும் தலைமை வகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெதர்லாந்து, கனடா நாட்டுப் பிரதிநிதிகள் இலங்கை வந்து சேர்ந்ததும் வடக்கிற்கான இரு கண்காணிப்புக் குழுக்களும் இயங்க ஆரம்பிக்கும். [இ-ஐ-3]

# வடக்கே அடிக்கடி செல்லும் சூழ்நிலை இந்த வருட இறுதிக்குள் உருவாகும்

## அமைச்சர் பத்திரன நம்பிக்கை

கொழும்பு. ஜன. 14

நாம் அனைவரும் அடிக்கடி வடபகுதிக்கு சென்று வரும் சூழ்நிலை இவ் வருட இறுதிக்குள் ஏற்படும்.

இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன.

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது அமைச்சர் முன்கண்டவாறு தெரிவித்தார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் சிறுவணிகர் நலன் பேணும் மன்றம் அமைப்பதற்கான

# அறிவித்தல்

நடமாடும் சிறு வியாபாரிகளின் நலன் பேணும் வகையில் மேற்படி மன்றம் ஒன்றினை அமைத்து அவர்களைத் தொழில் ரீதியாக ஊக்குவிப்பதற்கும், ஏனைய வகையில் மேம்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் கீழ் குறிப்பிடப்படும் வியாபாரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்திருக்கும் மேற்படி மன்றத்தின் பணிமனையில் தங்கள் உறுப்புரிமையைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. கச்சான், கடலை வியாபாரிகள்.
2. நடமாடும் இனிப்புப்பண்ட வியாபாரிகள்.
3. நடமாடும் பழ வியாபாரிகள்.
4. நடமாடும் மரக்கறி வியாபாரிகள்.
5. நடமாடும் ஐஸ்பழ வியாபாரிகள். (துவிச்சக்கர வண்டி, தள்ளுவண்டி)
6. நடமாடும் அழகுசாதனப் பொருள்கள் வியாபாரிகள்.
7. நடமாடும் பனம் பொருள் உற்பத்தி வியாபாரிகள்.
8. எண்ணெய் வியாபாரிகள் (நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்)
9. சிறு விளையாட்டுப் பொருள்கள் வியாபாரிகள்

போன்ற ஏனைய நடமாடி / நகர்ந்து வியாபாரம் செய்யும் அனைத்து வியாபாரிகளும் பதிவில் உள்ளடக்கப்படுவர். (மொத்த வியாபாரிகள் நிரந்தரமாகக் கடை அமைத்து வியாபாரம் செய்வோர் பதிவு செய்யப்படமாட்டார்கள்)

**பதிவுக் காலம்:**

12-01-1995 முதல் முடிவு திகதி அறிவிக்கும் வரை 10 நாட்களுக்கு பதிவு இடம்பெறும்.

**பதிவு செய்யும் நேரம்:**

காலை 9 மணி முதல் பகல் 3 மணிவரை

**பதிவு செய்யும் இடம்:**

திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் அமைந்திருக்கும் நடமாடும் சிறு வணிகர் நலன் பேணும் மன்றப் பணிமனையில் பதிவு செய்யப்படும்

குறிப்பு:- பதிவு செய்ய வரும் பொழுது குடும்ப அட்டையையும் கொண்டுவரவும்

நன்றி

நடமாடும் சிறுவணிகர்
நலன் பேணும் மன்ற அமைப்புக் குழு.
திருமாட்டி புடைவையகம் அருகில்,
பலாலி வீதி,
திருநெல்வேலி 06-01-1995 (34679)

---

வேலணை
## ப. நோ. கூ. சங்கம் (வ-து)
## பல்பொருள் விற்பனை நிலையம்

*திறந்து வைப்பவர்:*

திரு. க. பொன்னம்பலம்
(அரச அதிபர், யாழ். மாவட்டம்)

**மற்றுமோர் விற்பனைக் கிளை,**

**15-01-1995 இல் ஆரம்பம்**
(மு. ப. 11-00—12-00 இடைப்பட்ட சுபவேளையில்)

..................உங்கள் தேவை எதுவானாலும் உங்களிற்கு உதவிடும்

வேலணை ப. நோ. கூ. சங்க
பல்பொருள் விற்பனை நிலையம்
இல. 220, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

வேலணை ப. நோ. கூ. சங்க அங்கத்தவர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், நெறியாளர்கள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் 15-01-95ஆம் திகதி மேற்படி கிளையின் ஆரம்ப வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர்,
(சி-161) வேலணை ப. நோ. கூ. சங்கம்.

---

## வாடிக்கையாளர்களின் சிரமத்தை தவிர்க்க

**எமது வாடிக்கையாளர்களே!**

நீங்கள் எங்களுடன் கடிதமூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் வானொலி, ரேப்ரெக்கோடர்கள், ரி. வி. டெக் மற்றும் சுவர் மணிக்கூடுகளை நேரடியாக உங்கள் இல்லங்களில் வந்து பெற்று, குறைந்த செலவில் பழுது பார்த்து உங்கள் இல்லங்களிலேயே குறித்த தவணையில் ஒப்படைப்போம் (எம்மிடம் மின் வசதியுண்டு)

(குறிப்பு: கடித மூலம் தொடர்பு கொள்பவர்கள் முகவரியை தெளிவாக எழுதவும்)

டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்
284, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-267]

---

## யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்

## க. பொ. த. (உ. த)
# அனுமதி - 1997

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வுப் பெறுபேற்றின் அடிப்படையில் மேற்படி வகுப்பிற்கு (வர்த்தகம் / கலை) அனுமதி பெற விரும்புவோர் **25-01-1995** இற்கு முன்னர் கல்லூரியில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

— அதிபர்

[சி-166]

---

## புலிகளின் குரல் வானொலியில்

14 — 01 — 1995
சனி இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — "தேச நிர்மாணிகள்" உரைச் சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே பாலகுமாரன் எழுதிய "செச்செனியாவும், மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும்"
★ 8-50 — வாத்திய கானங்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

15 — 01 — 1995
ஞாயிறு காலை

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

சனி மாலை
ஒலிபரப்பு

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் விவாடி வினாப்போட்டி நிகழ்ச்சியில் சாவகச்சேரி றிபேக் கல்லூரி, நாவற்குழி ம.வி. ஆகிய பாடசாலைகளின் இரண்டாவது சுற்று
★ 6-00 — சிந்தனைக்குச் சில வரிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## ரிஸப் தேர்வு

யாழ்ப்பாணம், ஜன. 14

அரச தனியார் துறைகளிற் பணியாற்றுவோருக்கும் பாடசாலைப் படிப்பை முடித்தோருக்குமான, ஆறுமாத கால ஆங்கிலக் கற்கைநெறி பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆரம்பமாகவுள்ளது

இதற்கான தகுதியான தேர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பி. ப 2 மணிக்கு நடைபெறும் என மாநில இணைப்பாளர் திரு. சோ. பத்மநாதன் அறிவித்தார். [ஒ]

---

## பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி திருலோகநாதன்
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்

### திருச்செந்தூரன்

தனது 18 ஆவது பிறந்தநாளை யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள தனது இல்லத்தில் இன்று சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவர் பலகலைகளும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

— ஆருயிர் நண்பர்கள்

(34709)

---

பார்வையற்ற மாணவர்களிற்கு உதவியளிக்கும் முகமாக

## யாழ். றோட்டரக்ற் கழக

ஆதரவில்

வைகிங்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

மாபெரும்

## காட்சி உதைபந்தாட்டம்

சென். அன்ரனீஸ் எதிர் ஞானமுருகன்
பாடுமீன் எதிர் யங்கென்றீஸ்

இடம்: யாழ் மத்தியகல்லூரி மைதானம்
காலம்: 15-01-1995 (நாளை) **3.30** மணி

அன்பளிப்பு:

**CRONIN WATCH WORKS**
05, Stanley Road, Jaffna.

(34713)

---

## 31 ஆம் நாள் நினைவில்



| மலர்வு: | | மறைவு: |
| --- | --- | --- |
| 17 | | 15 |
| 10 | | 12 |
| 1931 | | 1994 |

### அமரர் முருகர் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற உப அதிபர், நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலயம்)

அன்பைச் சொரிந்து பண்பாக வளர்த்திட்டு பரிவுடன் ஒரு வார்த்தை கூறாது மின்னலென மறைந்ததேனோ? அப்பா நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றாலும் எங்கள் இதயங்களில் என்றென்றும் வாழ்வீர்களாக

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

சிக்னல் மரத்தடி,
காங்கேசன்துறை [7866]

---

# A/L கணக்கியல்

## மாணவர்களின் கவனத்திற்கு

CACA விபரப் பத்திரம்

The Following receipts and payments Account for the year ended 31st October 19-0 has been prepared from the Current Accounts Bank Statements of the Country Cousins Sports Club

| | | | |
| --- | --- | --- | --- |
| 19-9 Nov 1 Balance b fwd | 1,700 | 19-0 Oct. 31 Club house Rates and Insurance | 380 |
| 19-0 Oct 31 Subscriptions | 8,600 | Decoration and repairs | 910 |

A/L 1990 விசேட விபரப் பத்திரம்

இராமநாதன் விளையாட்டுக் கழகத்தின் நடைமுறைக் கணக்கின் வங்கிக் கூற்றுக்களிலிருந்து 1990 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்குப் பின்வரும் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்குத் தயாரிக்கப்பட்டது.

| | ரூபா | | ரூபா |
| --- | --- | --- | --- |
| 01-01-90 மீதி/மு/கொ/வ | 1,700 | கழக வளவு | |
| ஒப்பம் பணத் தொகைகள் | 8,600 | இறைகளும் காப்புறுதியும் | 380 |
| | | பழுது பார்த்தல்கள் | 910 |

**CACA, AAT, CIMA, ICSA, ICA, AEB, UL, ACA, NEA, MEG, SEB** ஆகியவற்றை உள்ளடக்கி

## கணக்கியல் I

ஆக்கியோன்: **D. SAM**

★ பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

[34695]

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | | மறைவு: |
| --- | --- | --- |
| 03 | | 17 |
| 04 | | 12 |
| 1912 | | 1994 |

அளவெட்டி
## அமரர் நா. தம்பிப்பிள்ளை (O.A)
(இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்)

கண்ணை இமை காப்பது போல் எமையெல்லாம் அன்பும், பரிவும், பாசமும் வாரி வழங்கிக் காப்பாற்றி, நெறிப்படுத்தி, ஆளாக்கிய எமது குடும்பத் தெய்வம் அமரர் நா. தம்பிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும், வீட்டுக்கிருத்தியமும் **16-01-1995** திங்கட்கிழமை "நவசக்தி", கண்டி வீதி, பரந்தனில் உள்ள அன்னாரது மகன் த. பாலகிருஷ்ணனின் இல்லத்தில் நடைபெற உள்ளது என்பதனை அறியத் தந்து அவற்றில் பங்குகொள்ளுமாறு அழைக்கிறோம்;

மேலும், அன்னாரின் மரணச்செய்தி கேட்டும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் உதவிகள் நல்கிய அயலவர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அனுதாபச் செய்திகள் வெளியிட்டும், அனுப்பியும் உள்ள அனைவருக்கும்;

சமயக் கிரியைகள் அனைத்தையும் சிறப்பாக நடத்தித் தந்த குருக்கள் ஐயாமார் அனைவருக்கும்;

எமது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்கள்; வசந்தகோகிலம்,
சியாமளசுந்தரி,
இராஜராஜேஸ்வரி,
சித்திரலேகா,
இராதாகிருஷ்ணன்,
(அவுஸ்திரேலியா)
பாலகிருஷ்ணன்,
(நவசக்தி, பரந்தன்)
பத்மலோஜினி.

மருமக்கள்: தங்கவடிவேலு,
தர்மசீலன்,
சிவசுப்பிரமணியம்,
தவராசிங்கம்,
அமுதா.
(அவுஸ்திரேலியா)
சந்திராதேவி,
குணசிங்கம் B. A.

பேரப்பிள்ளைகள்: த. கிருபாகரன் B. Sc
த. மாலினி B. A.
த. குமுதினி,
த. பிரபாகரன்,
த. சுரேஷ், த. துஷ்யந்தி,
சி. லோஜிகா,
இ. சஜிதா,
பா. தினேஷ்குமார்,
பா. சுபேஷ்.
கு. சுபராம், கு. சிந்துஜா,
கு. கோபிராம்,
கு. சிறீராம்.

"நவசக்தி",
கண்டி வீதி, பரந்தன். [34700]

---

## 31 -ம் நாள் நினைவஞ்சலி



கட்டுவன் தன்னிதாழ்வைச் சேர்ந்த

### அமரர் ஆறுமுகம் கந்தையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 28-08-1918 | 15-12-1994 |

அன்புக் கணவனாய், பாசமிகு தந்தையாய், ஆசைமிகுந்த பேரனுமாய் பரிவுடனும், பாசத்துடனும் எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா இந்நாளில் சாந்தியடைய ஞானவைரவப் பெருமானின் திருவடிகளை வேண்டி நிற்கிறோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

விசுவத்தனை வீதி,
பன்னாலை தெற்கு,
சுழிபுரம். (7862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளை அனுப்பும் பணி
# இம்மாதம் மீண்டும் ஆரம்பமாகும்

சென்னை.ஜன.14
தமிழ் நாட்டிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பும் பணி இம் மாதம் மூன்றாவது வாரத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. அரிபாஸ்கர் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மத்திய அமைச்சரவைச் செயலர் திரு. சுரேந்திரசிங் தமிழக அரசு அதிகாரிகளுக்கிடையே நடந்த ஆலோசனைகளைஅடுத்துஇந்த முடிவு எடுக்கப்பட்டது என்று கூறினார்.

தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் முகாம்களில் தற்போது 64 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர் என்றும் விருப்பமுள்ளவர்கள் மட்டுமே இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் பணியில் எத்தனை கப்பல்களை ஈடுபடுத்துவது என்பது குறித்து எதிர்வரும் 17 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறும் கூட்டமொன்றில் முடிவு செய்யப்படும் என்றும் திரு. அரிபாஸ்கர் கூறினார்.

(இ-4)

### காணாமற்போனோர் விசாரணை:
## ஆணைக்குழு உறுப்பினர் மட்டுநகர் செல்கின்றனர்

காணாமற்போனோர் பற்றி விசாரணை நடத்தும் ஆணைக்குழுவினர் அடுத்த வாரம் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு விசாரணை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த ஆணைக்குழு முன்னிலையில் காணாமற்போனோர் பற்றியும், நீதிமன்ற விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் குறித்தும் எவரும் சாட்சியம் அளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### சாவகச்சேரியில் முத்திரையிடல்

தென்மராட்சி, ஜன. 14
சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிறுவனங்களின் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் எதிர்வரும் 26ஆம் திகதிவரை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இக்காலப் பகுதிக்குள் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு சகல வர்த்தக நிலையங்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

(ஒ-117)

### மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 14
குடாநாட்டில் மரக்கறிகளின் விலையில் பெரிதும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

போதியளவு மரக்கறி வகைகள் சந்தைக்கு வருவதாலேயே அவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

[ஒ-17]

### பல லட்சம் பாக்கி இருக்கும்போது
## ரூ.50 நிலுவை இருந்தால் மின் துண்டிக்கப்படுகிறது
### சிங்களப் பத்திரிகை கண்டனம்

மின்சார நிலுவையாக லட்சக்கணக்கில் செலுத்தவேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத மின்சாரசபை 50 ரூபா நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களின் மின்சார இணைப்பை துண்டிக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமின'' சிங்களப் பத்திரிகை மேற்கண்ட செய்தியை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

பல அரசியல்வாதிகளும், தொழிற்சாலை உரிமையாளர்களும் லட்சக்கணக்கான பணத்தை மின்சாரசபைக்கு நிலுவையாகச் செலுத்த வேண்டியுள்ளதாகவும்—

அது குறித்து மின்சாரசபை அக்கறைகாட்டவில்லை என்றும்—

ஆனால் 50 ரூபா மின்சார நிலுவை செலுத்தவேண்டிய சாதாரண மக்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்றது என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-3)

### மலசலகூடங்கள் திருத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 14
அரியாலை சாம்சன் குடியிருப்பில் உள்ள மலசலகூடங்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

இம்முகாமில் உள்ள 18 மலசல கூடங்களையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் திருத்தி வருகின்றது. [ஒ-17]

### பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜன. 14
சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்திய சைவ சமய பாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா —

நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3-30 மணிக்கு சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

(ஒ-117)

### மாநாட்டு மண்டபம்

தென்மராட்சி, ஜன. 14
பளை பிரதேச செயலக வளவில் ரூபா ஒரு லட்சத்து 5 ஆயிரம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டபம் பிரதேச செயலர் திரு. இ. ஐயாத்துரையால் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

(ஒ-117)

# இந்தியா-அமெரிக்கா ராணுவ ஒப்பந்தம்

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ராணுவ ஒத்துழைப்புப் பற்றிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பாறி புதுடில்லியில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

இந்த உடன்படிக்கை ஒரு வரலாற்று ரீதியான மாற்றம் எனவும் அது இந்திய-அமெரிக்க உறவுகளில் புதியதோர் யுகத்தை ஆரம்பித்துவைக்கும் எனவும் அவர் கூறினார்.

கூட்டு ராணுவப் பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றின் அளவு இந்த உடன்படிக்கையால் அதிகரிக்கும். [க]

## மாவட்ட அபிவிருத்திக்கு அரச அதிபரே பொறுப்பு!

கொழும்பு.ஜன.14
மாவட்டங்களின் அபிவிருத்திக்கு அந்தந்த மாவட்டங்களின் அரச அதிபர்களே பொறுப்பாக இருப்பர் என்றும் —

இதன் போது சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றை பொது நிர்வாக அமைச்சு தீர்த்து வைக்கும் என்றும்-

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கும் இந்த நடைமுறை பொருந்தும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(ஐ-க)

### தெஹிவளை,பம்பலப்பிட்டியில்
## பொலீஸாரும் படையினரும் கூட்டாகத் தேடுதல்

கொழும்பு, ஜன. 14
தெஹிவளை, பம்பலப்பிட்டி பகுதிகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் நடத்தியதாக நேற்றைய கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

வீடுகளிலும் சோதனைகள் நடத்தப்பட்டன. வீடுகளில் இருந்து கடமைக்காக வெளியே சென்றவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், மாணவிகள் அனைவரும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. [ஒ-ஐ]

### இனப்பிரச்சினை தீர்ந்தால்
## வடக்கு - கிழக்கிலும் குடிசன மதிப்பீடு

இனப்பிரச்சினை தீர்ந்தால் வடக்கு- கிழக்கு பகுதியிலும் குடிசன மதிப்பீடு நடத்தப்படும்.

வடக்கு- கிழக்கில் 1981 ஆம் ஆண்டு கடைசியாக குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது. அதன் பின் 1991 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பிரச்சினைகள் காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அது நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-ஐ]

# வெளிநாட்டு சிறைகளில் 860 இலங்கையர்கள்!

கொழும்பு, ஜன. 14
பல்வேறு காரணங்களுக்காக சுமார் 860 இலங்கையர்கள் வெளிநாடுகளில் சிறைகளில் உள்ளனர் என குற்றப் புலனாய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா, ஹொங்கொங், ஜப்பான், மலேசியா, ஜேர்மன், இந்தியா, இத்தாலி போன்ற நாடுகளிலேயே அதிக இலங்கையர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

கொலை, கொள்ளை, போதைவஸ்து கடத்தல், விஸா மோசடி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக இவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ஐ)


வாணிப,
தொழில் நிறுவனங்களுக்கு

தமிழீழ வருவாய்த்துறைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஏற்ற முறையில் எல்லாவகையான வியாபாரக்கணக்குகள், உற்பத்திக் கணக்குகள், இலாப நட்டக்கணக்கு ஐந்தொகை, மூலதனக்கணக்கு ஆகியவை தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் எழுதிக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

A. Y. மூர்த்தி
(முன்னாள் அரச உத்தியோகத்தர்)
கிராம்புவில் மேற்கு,
கல்வயல், சாவகச்சேரி.

(34702)



வெற்றிவாகை சூடிய ஃபிறீஸியன் பசுக்களின் செழுமையும் போசாக்கும் மிக்க பால்


...உங்கள் பிள்ளைக்கு.



உங்கள் பிள்ளை ஃபாம் ட்ரஸ்ட் முழுஆடைப்பாலின் பாலாடைச் சுவையை நிச்சயம் விரும்பும். ஏனெனில் ஃபாம் ட்ரஸ்ட் உலகிலேயே சிறந்த பால்தரும் இனமான ஒல்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஃபிறீசியன் பசுக்களின் புதுமை குன்றாத பால்.

ஃபாம் ட்ரஸ்ட் பாற் புரதங்கள் நிறைந்ததும் உண்மையிலேயே போசாக்கும் மிக்கது. அதன் தரச்சிறப்பு உற்பத்தியின் முதற்படியிலிருந்தே உத்தரவாதமளிக்கப் படுகின்றது.

விற்றமின்கள் சேர்க்கப்பட்ட ஃபாம் ட்ரஸ்ட் ஒரு ஒல்லாந்து [illegible] பத்தி.




QUALITY ASSURED GUARANTEED HOOGWEGT GROUP B.V. HOLLAND AT SOURCE

ஃபாம் ட்ரஸ்ட்
நீங்கள் நம்பத்தகுந்த பால்

LDB LINTAS

முகவர்:- ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்டோர்ஸ் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

(சி/152)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொங்கல் வாழ்த்துமடல், பொருளியல் நோக்கு நூல் நிலையங்களுக்கு ஏற்ற நாவல்கள், கொப்பி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஸ்ரீகாந்த் புத்தகசாலை யாழ் - நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ். மற்றும் கலண்டர், டயறிகள் மலிவு விலையில்.

[சி-277]

தக்காளிக் கன்று விற்பனைக்கு உண்டு. Taste Line Industries (Pvt.) Ltd., இல. 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-145)

நான்கு மாதம் நிறைந்த பன்ரம் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. 21, றக்கா வீதி (I. C. R. C.க்கு அண்மையில்), யாழ்ப்பாணம்.

(34694)

(Honda CD. 70) மோட்டார் சைக்கிள் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (34697)

### கோழிக்குஞ்சு விநியோகம்

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை கறுப்பு இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும. ஓடர்கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும். மல்வம் வீதி ஊடாக சிங்கம் வீதி, உடுவில்.

[7859]

Prima Broiler குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34677)

### மலிவு விற்பனை

எங்களிடம் சண்(Sun)மார்க் நூல் வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட Bratape எலாஸ்டிக் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், இல. 303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

(34635)

### தளபாடங்கள்

பலசரக்குக்கடை பாவனைக்கு உகந்த றாக்கைகள் 10 அடி நீளம் 7 அடி உயரம் (ஒன்று), 12 அடி நீளம் 7அடி உயரம் [இரண்டு] விற்பனைக்குண்டு. தொடர்பு: அருள்ஸ் தொழிலகம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-283]

### சித்திரம்

ஆண்டு 6, 7, 8 Bright இன் மாணவர்களுக்கான சித்திரம் விலை 50/- எழுதியது சுமதி ரஞ்சகுமார் B. A. (Hons), பூபாலசிங்கம் [புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்] கொள்ளலாம். (34565)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கந்தசுவாமி கோயில் சமீபமாக, டச்சுவீதியிலிருந்து சிறிது தூரத்தில் தென்னை-மாமரங்கள் உள்ள, சுற்றுமதிலும், கேற்றும்கொண்ட, ஒன்றரைப் பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விலை விவரத்துடன் கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 746, மே/பா, உதயன், யாழ்ப்பாணம் (34656)

### புலமைப் பரிசில் - 95

யாழ் Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

[8187]

### கணக்கு இலிகிதர் தேவை

கணக்கியலைப் பாடமாகக் கொண்டு க. பொ த. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம். கீழ்வரும் முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (34689)

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

[சி-254]

### இலகு திருமண சேவை

34 வயது, உத்தரட்டாதி, செவ்வாய் குற்றமற்ற ஜேர்மன் மணமகன் யாழ். உள்ளவர். பொருத்தமான மணப்பெண் உடன் தேவை. விவாகம் செய்து அழைக்கலாம். தொடர்புகொள்ளவும். து. விமலா யாழ். நாச்சிமார் கோயிலடி. [3466 1]

### பயிற்சி நெறிகள்

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இவ்வாண்டு மாசி, பங்குனி மாதங்களில் இயற்கைப் பசளை, பழப்பயிர் நாற்று மேடை, மேல்நாட்டு, உள்நாட்டு மரக்கறிப் பயிர்களின் பயிர்பாதுகாப்பு, பழப்பயிர்களில் இனட்பெருக்கமுறைகள், மரக்கறிப்பயிர் நாற்றுமேடை ஆகிய துறைகளில் குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறிகள் நடைபெற உள்ளன,

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது கட்டுப்பாடு இல்லை.

---

ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த பொங்கல்
வாழ்த்துக்கள்

**சில்வா மணிக்கூட்டு நிறுவனம்**

அன்னை வேளாங்கண்ணி,
15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/290)

---

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகில், யாழ்ப்பாணம்.

A/L 95 ஆம் ஆண்டுப் பரீட்சை எடுக்கும்
மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்பு

**ஆரம்பம்: 14 - 1 - 1995**

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | 1–3 |
| வர்த்தகம் | — | 3–4 |
| அளவையியல் | — | 4–5 |
| பொருளியல் | — | 5–6 |
| தமிழ் | — | 2–3 |
| இந்து நாகரிகம் | — | 8–9 |

குறிப்பு:-
பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான இவ்வகுப்பு அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

— நிர்வாகி.

(சி/289)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பொன். கமலநாதன்

[வடக்கு - கிழக்குமாகாணசபை இணைப்பாலோசகர்]

அன்னையின் மடியில்: **1-9-1942**

மண்ணின் மடியில்: **19-12-1991**

திதி: 14–1–1995

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
எம்மை அன்போடும் அறிவோடும் பண்போடும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

திருமதி இ. கமலநாதன்,
22, நெல்சன் பிளேஸ், கொழும்பு -6.

[34698]

---

## நூலகர் தேவை

இயங்கிக் கொண்டிருக்கும் எமது நூலகத்திற்கு நூலக விஞ்ஞானம் பற்றிய அறிவுள்ள பெண் நூலகர் தேவை. விண்ணப்பங்கள் 20-01-1995 க்கு முன் அனுப்பப்பட வேண்டும்.

அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**பெண்கள் ஆய்வு நிறுவனம்**

இராச வீதி,
கல்வியங்காடு, கோப்பாய். (34680)

---

## சில்வர் சீல்ட்
### தயாரிப்புக்களான

- ☆ நைலோன் கொட்டன் சொக்ஸ்
- ☆ எலாஸ்டிக்
- ☆ பட்டன்கள்
- ☆ சிப்
- ☆ லேஸ்

யாவற்றிற்கும்




**சிறி முருகன்**

303. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்

[34633]

---

## திருமறைக் கலாமன்றம்
எடுக்கும்
## பொங்கல் விழா

**15 - 01 - 1995** ஞாயிறு அதிகாலை 5-30மணி மன்ற முன்றிலில் பொங்கல் வைபவம்

தலைமை:
அருட்திரு கலாநிதி எஸ். ஜே இம்மனுவேல்
(யாழ். மறைவட்ட குரு முதல்வர்)

சிறப்பு விருந்தினர்:
திரு. க. குணராசா
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

மாலை 6-45மணிக்கு மன்ற அரங்கில்

**பொங்கல் கலைவிழா**

✶ வீணை இசை ✶ பாட்டு
✶ வாத்திய பிருந்தா

சிறப்பு நடனங்கள்:

★ பரதம் ✶ கதகளி ✶ கிராமியம்

**பிரவேசம் இலவசம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

— திருமறைக் கலாமன்றம்.

238. பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-162)

---

## இறைமகன் யேசுவிற்கு
## நன்றித்துதி

எனது உடல் நோயையும், என் குடும்பத்தின் தேவைகளையும் இறைமகன் யேசுவிடம் விண்ணப்பித்து, அனுதினமும் அவரிடம் வேண்டுதல் செய்து வந்தமையினால் மிகக்குறுகிய காலத்தில் அவரது அளவிடமுடியாத வல்லமை, எமக்குக் கிடைக்கப்பெற்றது. இதற்கமைய இயேசுவிற்கும் பிதாவானவருக்கும் நன்றி கூறி அவரை மகிமைப்படுத்துகின்றேன்.

— இயேசுவின் பக்தன்.

அரியாலை (34693)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 21 – 09 – 1924



மறைவு: 26 – 12 – 1993

அமரர்
### சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம்

[இளைப்பாறிய புகையிரதத் திணைக்கள தலைமைப் பாதுகாவலர்]

திதி: 14 – 01 – 1995

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதிந்திருக்கும், உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் பிரிவு தாங்காது துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தர்மினி பவனம்',
கோயில் வீதி,
கொக்குவில். (34678)

---

## உள்ளக
## கணக்காய்வாளர்களுக்கான
## வேண்டுகை

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் உள்ள வாணிப நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வாளராகப் பணிபுரிய தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து வேண்டுகைகள் கேட்கப்படுகின்றன.

தகைமைகள்:-

க. பொ. த (உயர்தரம்) தேர்வில் வர்த்தகப் பிரிவில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், கணக்காய்வு தொடர்பான ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் பட்டறிவுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் அல்லது அரச திணைக்களங்களில் கணக்கியலாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றிருத்தல் வேண்டும்.

வேண்டுகை அனுப்பிவைக்கவேண்டிய முடிவு நாள்:
**20–01–1995.**

வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

இல. 747,
C/O] உதயன்
யாழ்ப்பாணம்.

(C/163)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 25 – 09 – 1931



இறப்பு: 26 – 12 – 1993

திருமதி
### இராஜரட்ணம் ஞானேஸ்வரி

திதி: 14 — 1 — 1995

அன்புமழைபொழிந்து, அமுத மொழிபேசி, ஆசைக் கரம் நீட்டி. எங்களையெல்லாம் ஆளாக்கிய அம்மாவே! பிரிவு இயற்கையானது, எங்களை நினைத்துவாழ்ந்த நீங்கள் எம்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள், காலன் உங்களை எங்களிடமிருந்து பிரித்தாலும் எம் இதயங்களில் நிலையாக நிற்கும் உங்கள் நினைவு ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும், எங்கள் உள்ளத்தில் என்றும் நிறைந்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

(34683)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகரட்ணம் யோகராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, சென்ஜோன்ஸ் கல்லூரி ஆரம்ப பாடசாலை)

தோற்றம்: 28 — 07 — 1918

மறைவு: 14 — 01 — 1994

திதி: 02 — 02 — 1995

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"
எங்கள் அன்பின் மம்மியே!
உங்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

கனகரட்னம், குடும்பம்,
அற்புதராஜா குடும்பம்,
சிறீறாம் குடும்பம், —
நகுலேஸ்வரன் குடும்பம், — ஜேர்மனி
வரதராஜா குடும்பம்,
சிறீதர். —

[34676]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இன்றைய பேச்சு

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மூன்றாம் கட்டப் பேச்சு இன்று யாழ்ப்பாணத்தில் நடக்கவுள்ளது.

இன்றைய பேச்சில் ஆராயப்பட இருக்கும் விடயங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதை திறத்தல், புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகள் ஆகியனவே பிரதானமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடிப்படைப் பிரச்சினையான அரசியல் விவகாரம் குறித்துப் பேசுவதற்கான திகதியை நிர்ணயிப்பது சம்பந்தமாகவும் இன்று கலந்தாலோசிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது. அரசுக்கு அந்த எண்ணம் உண்டு என்பதனை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த வெளியிட்டிருந்தார்.

எப்படியோ, இன்றைய பேச்சு முக்கிய கட்டமாக அமைகிறது. போர் இடைநிறுத்தம் இடையூறு இன்றி வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அது நீடிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகாவே நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அத்தகைய ஒரு சூழ் நிலையில், சமாதானப் பேச்சும் தடங்கலின்றி சுமுகமாக, படிப்படியாக முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

ஆனால், அரசாங்கத் தரப்பில் இருந்து வரும் "செய்திகள்", அவர்கள் பேச்சு ஒழுங்கை மாற்றுவதில் அவசரப்படுகிறார்களோ என்று எண்ண வைக்கிறது. தமிழ் மக்களின் இயல்பு நிலை வாழ்க்கையை மீட்டு, அவர்கள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழும் ஒரு நிலை முதலில் உருவாக வேண்டும்.

அந்த நிலையை எய்திய பின்னர், அடிப்படை அரசியல் விவகாரம் குறித்துப் பேசுவதே பொருத்தமாக அமையும். மக்களின் வாழ்க்கை நிம்மதியற்று இருக்கும் போது, அரசியல் தீர்வைக் காண்பதில் அதி அவசரம் காட்டுவது உகந்தது அல்ல.

இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் கண்டுவிட்டால், ஏனைய விடயங்கள் யாவும் சரியாகி விடும் என்று அரசு தரப்புக் கருதலாம். ஆனால் சில நாள்களோ, இரண்டொரு வாரங்களோ பேசுவதன் மூலம் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட தனது சொந்தத் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு பேச்சு வார்த்தை மேசையில் போட விருப்பது வரவேற்கத்தக்கது தான். ஆனால் அந்த அத்திவாரத்திலிருந்து, பல படிகள் தாண்டிச்சென்று தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கும் தீர்வை வகுப்பது என்பது ஒரு சில நாள்களில் முடிந்துவிடக் கூடியது அல்ல.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை விரைவில் கண்டுவிட்டால், ஏனைய பல துறைகளில் நாட்டை புதிய பாதையில் ஜனாதிபதி சந்திரிகா கட்டி எழுப்புவதற்கு சாதக நிலை தோன்றும் என்பதனைத் தமிழர்கள் உணராமல் இல்லை.

மிகக் குறிப்பாக வெளிநாடுகளினதும், சர்வதேச நிதிநிறுவனங்களினதும் உதவிகள், வெளிநாட்டு முதலீடுகள் என்பன தடங்கலின்றி வந்து சேருவதற்கு, இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டிய கட்டாய தேவை புதிய அரசுக்கு உண்டு. ஆகையால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஓர் அவசரம் உண்டு என்பதனைப் புரிந்து கொள்ள முடியாமல் இல்லை.

ஆனால், அதன் பொருட்டு அளவுக்கு அதிகமாக அவசரப்பட்டு, அரை வேக்காட்டுத் தீர்வு ஒன்றை வகுப்பதனைத் தமிழர்கள் விரும்பவில்லை. தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதில் அரசு வேகமாகச் செயற்பட்டால், அரசியல் தீர்வை விரைவில் காண்பதும் சாத்தியமாகிவிடும் அல்லவா?

# லயனல் ஆளுநராக இருந்த வேளையில் பல்வேறு மட்டங்களில் லஞ்சம், ஊழல்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பதில்

லயனல்பெர்னாண்டோ ஆளுநராகஇருந்தபோது வடக்கு–கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சில் இடம்பெற்ற தவறுகளை கண்டித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்ததும்—

அவ்வேளை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளராகவும், "லேக்ஹவுஸ்" நிறுவனத் தலைவராகவும் இருந்த லயனல் பெர்னாண்டோ பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே

தமக்கு எதிராக அறிக்கை வெளியிட்ட ஆசிரியர் சங்கம், விடுதலைப் புலிகளின் சங்கம் என்றும் –

அதில் கூறப்பட்ட விடயங்கள் முற்றிலும் தவறானவை என்றும் திரு லயனல் பெர்னாண்டோ தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்த அறிக்கையில் சில பகுதிகள் அண்மைக் காலத்தில் உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

லயனலின் பதில் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்து அவருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் அனுப்பிய கடிதத்தின் சாராம்சம் இங்கு பிரசுரமாகின்றது.

அமைச்சுச் செயலாளர் பதவி, லேக்ஹவுஸ் பதவி ஆகிய இரண்டையுமே லயனல் தற்போது ராஜினாமாச் செய்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுசனத் தொடர்பு விவகார அமைச்சின் செயலாளரும் லேக்கவுஸ் நிறுவனத்தின் தலைவராகவுமுள்ள தாங்கள் எமது சங்கத்தை எல்.ரி.ரி.ஈ சங்கம் எனத் தினகரன், ஞாயிறு ஒப்சேவர் பத்திரிகைகளில் குறிப்பிட்டிருப்பது எமக்கு வேதனை தருகின்றது. பொறுப்பு வாய்ந்த பதவியில் அமர்ந்துள்ள தாங்கள் இவ்வாறு ஒரு பிழையான முறையில் எமக்கு அரசியல் சாயம் பூச முயலாதீர்கள்.

எமது சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே (1950களிலிருந்தே) எந்த அரசியல் கட்சியுடனோ அல்லது அமைப்புக்களுடனோ அவற்றின் அங்கமாக இணைந்திருக்கவில்லை என்பதையும் எமது சங்கம் எந்தவித அரசியல் கலப்புமற்ற ஒரு சுதந்திரமான ஆசிரிய தொழிற்சங்கம் என்பதையும் தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

எமது சங்கத்தின் செய்தியொன்றை நாம் உத்தியோக ரீதியாக கொடுக்காமலே ஒரு பொதுசனத் தொடர்பு சாதனம் வெளியிட்டால் நாம் அப்பொதுசனத் தொடர்பு சாதனத்தின் சங்கம் என யாரும் கருதலாமா?

### அவகாசம் கோரினோம்

தாங்கள் வடக்கு—கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராக பதவி வகித்த காலத்தில் தங்களைச் சந்திக்க நாம் அவகாசம் கோரவில்லையென பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டுள்ளீர்கள். இது உண்மைக்குப் புறம்பானது.

தங்களைப் பேட்டி காண நாம் அனுமதி கோரினோம். தாங்கள் எமது சங்கப் பிரதிநிதிகளுடன் பேட்டி காண சம்மதம் தெரிவித்து அனுப்பிய தகவல் எமது யாழ். தலைமை அலுவலகத்திற்கு தாமதமாகவே கிடைத்தது. இதனால் தங்களுடனான சந்திப்பு நிகழவில்லை.

எனினும் தகவல் கிடைத்தவுடன் வவுனியா வந்து தங்களின் கொழும்பு, திருகோணமலையில் அமைந்திருக்கும் அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேட்டிக்கு பிறிதொரு சந்தர்ப்பத்தைத் தருமாறு கோரினோம். தாங்கள் நாடாளுமன்றத் தேர்தல் முன்னோடி வேலைகளைக் கவனிப்பதால் உடனடியாக நேரம் ஒதுக்க முடியாதிருப்பதாகவும், தேர்தல் முடிந்ததும் பேட்டிக்கு பிறிதொரு சந்தர்ப்பத்தை வழங்கத் தாங்கள் ஒப்புக்கொண்டதாகவும் திருகோணமலையில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலக அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

எனவே தங்களைச் சந்திக்க நாம் அவகாசம் கோரவில்லையென்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

### ஊழல் மோசடி

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிர்வாகச் சிக்கல்கள், ஊழல்கள், மோசடிகள் தொடர்பாக நாம் பதிவுத் தபால் மூலம் தங்களுக்கு 'அந்தரங்கமானது' எனத் தபாலுறையில் எழுதி அனுப்பியுள்ளோம்.

இதன் அடிப்படையில் தங்கள் அலுவலகம் இவ்விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுச் செயலாளரை (கல்வி) தாங்கள் கோரியுள்ளதாக தங்கள் அலுவலக அதிகாரிகள் அறிவித்திருந்தனர். முறைப்பாட்டாளரான என்னை அழைக்காமலே ஓர் விசாரணையும் நடைபெற்றது.

நிலைமை இவ்வாறிருக்க தங்களிடம் முறைப்பாடு செய்யவில்லை எனத் தாங்கள் பத்திரிகையில் வெளியிட்டிருப்பது உண்மைக்குப் புறம்பானது.

### செயலாளர்களை ஏன் மாற்றினீர்கள்?

தாங்கள் ஆளுநராகப் பதவியேற்று 2 மாதங்களில் மாகாண அமைச்சுச்செயலாளர்கள் சிலரை மாற்றியுள்ளீர்கள் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இவர்களை ஏன் மாற்றம் செய்தீர்கள் என்பதனை மக்கள் சமூகம் சிக்குத் தெரியுமென நம்புகின்றோம்.

இவர்களை மாற்றம் செய்ய முன்னர் நிலைமையில் சீர்திருத்தம் இருந்ததா என்பதை தாங்கள் ஆராய்ந்திருந்தால் தாங்கள் மாற்றம் செய்ததன் நோக்கம் நிறைவேறவில்லை என்பதனை தாங்களே உணர்ந்திருப்பீர்கள் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

கட்டட ஒப்பந்தம், தளபாட ஒப்பந்தம் ஆகியவற்றில் மில்லியன் கணக்கில் மோசடி நிகழ்ந்துள்ளது என திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் பகிரங்கமாகவே கதைக்கின்றமையை எனது காதால் நானே கேட்டுள்ளேன்.

கடந்த காலங்களில் மாவட்டத்திற்கு பரவலாக்கம் செய்யப்பட்ட கட்டட, தளபாட ஒப்பந்தங்களை தற்போது மாகாண அமைச்சுச் செயலாளர்கள் தாமே கையில் எடுத்து வைத்து உள்ளார்கள். இது ஏன்?

### ஆசிரிய வெற்றிடங்கள்

ஆசிரியர்களுக்குரிய வெற்றிடங்கள் வடக்கு - கிழக்கில் 5,000 எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். வடக்கு - கிழக்கில் 7,000க்கு மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உண்டு என்பது எமது கணிப்பீடாகும்.

1990ஆம் ஆண்டின் பின் தேசிய மட்டத்தில் ஆசிரியர்களின் தொகை ஏறக்குறைய 30,000த்தால் கூடியுள்ளது. ஆனால் 1990இல் 8,000க்கு மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்டிருந்த மாவட்டம் 1994இல் 5,000 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கில் ஆசிரிய தொகை வீழ்ச்சி அடைந்து கொண்டுபோய்க் கொண்டிருக்கின்றது. ஆனால் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஆசிரிய தொகை படிப்படியாக உயர்ந்து கொண்டு போயுள்ளது.

இவ்வெற்றிடங்களை நிரப்ப இலங்கை அரசமைப்பின் 13 ஆம் சரத்து தங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றது. இதன் அடிப்படையில் 101 பட்டதாரி ஆசிரியர்களை நியமித்திருப்பதாகத் தெரிவித்துள்ளீர்கள். வெற்றிடம் தொடர்பான தங்களின் கணிப்புச் சரியென நோக்கினாலும் 101 ஆசிரிய நியமனம் "யானைப் பசிக்குச் சோளப்பொரி" போன்ட கதையாக அமைகின்றது.

தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து எஞ்சிய வெற்றிடங்களை பட்டதாரிகள், டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களைக் கொண்டு தாங்கள் நிரப்பத் தவறியுள்ளீர்கள் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தங்களது சொந்தச் சிந்தனையில் கல்வியில் ஒரு முன்னோடித் திட்டத்தைப் பரீட்சார்த்தமாக தமிழ் பிள்ளைகளுக்குச் சிங்களமும், சிங்களப் பிள்ளைகளுக்குத் தமிழும் கற்பிக்க பயிலுநர் ஆசிரியர்களை நியமித்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இலங்கை அரசமைப்பில் எந்தச் சரத்தும் ஆளுநர்களின் சொந்தச் சிந்தனையில் கல்வியைப் பரீட்சார்த்தம் செய்ய ஆளுநர்களை அனுமதிக்கவில்லை என்பது எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

### அரசமைப்புக்கு முரணான செயல்

பயிலுநர் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் இலங்கை அரசமைப்பின்படி மத்திய அரசின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவிடமே உள்ளது. இவ்வதிகாரம் மாகாண சபைகளுக்கோ, ஆளுநருக்கோ வழங்கப்படவில்லை.

எனவே மாதாந்த அடிப்படையில் ரூபா 1,500/- மட்டும் அலவன்ஸாகக் கொடுத்து தாங்கள் செய்த 76 பயிலுநர் ஆசிரியர் நியமனமானது இலங்கை அரசமைப்பின் 13 ஆவது சரத்தினால் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார எல்லையை மீறித் தாங்கள் செய்த செயல் எனக் குற்றஞ்சாட்ட விரும்புகின்றோம்.

இந்நியமனங்கள் அரசமைப்புக்கு முரணானவை என்பதால் இதற்காகச் செலவிடப்பட்ட அரச நிதி வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது எனவும் கருதலாம்.

### பாகுபாடு காட்டியுள்ளீர்கள்

தங்களின் சொந்தச் சிந்தனையிலான பரீட்சார்த்தத் திட்டம் ஆனது வடக்கில் அமுல் நடத்தப்படாது கிழக்கில் மாத்திரம் அமுல் நடத்தப்பட்டது ஏன்? இதன் மூலம் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெவ்வேறு விதமான அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது அதாவது தங்கள் அணுகுமுறையில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

இத்திட்டமானது கிழக்கு மாகாணத்தில் படிப்படியாகச் சிங்களத்தைப் புகட்டி வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்தெடுக்கும் அரசாங்கத்தின் முன்னோடித் திட்டம் எனச் சிலர் கூறியுள்ளனர்.

தாங்கள் ஆளுநராக இருந்த காலத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் கல்வி அபிவிருத்தியில் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### முடிவு

★ எக்கட்டத்திலும் தாங்கள் நேரடியாக இலஞ்சம் வாங்கியதாகவோ அல்லது ஊழல்கள் மோசடிகளில் ஈடுபட்டதாகவோ நாம் எவருக்கும் கூறவில்லை.

★ மேலே குறிப்பிட்ட விடயங்கள் இலங்கை அரசமைப்பிற்கு முரணான செயல் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

★ கல்வியில் சொந்தச் சிந்தனைக்கும், பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கும் ஆளுநருக்கு அதிகாரம் இல்லை.

★ தாங்கள் ஆளுநராக இருந்த காலத்தில் இலஞ்சம், ஊழல் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வெவ்வேறு மட்டத்தில் நடந்துள்ளது. அவற்றைக் கண்டுபிடிக்கத் தாங்கள் தவறிவிட்டீர்கள்.

★ மேலே குறிப்பிட்ட விடயங்களை ஆராயும் போது, தங்களைத் தங்கள் அலுவலக அதிகாரிகள் சரியாக வழிநடத்தத் தவறியுள்ளனர். அல்லது தங்கள் கவனத்திற்குக் கொண்டுவராமலே நடவடிக்கை எடுத்துள்ளனர்.

★ கிழக்கு மாகாணத்தில் காட்டிய அக்கறையை தாங்கள் வடக்கிற்குக் காட்டவில்லை.

1994 ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் மட்டக்களப்பு, கல்முனை திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு நாம் நேரடியாகச் சென்று அங்குள்ள ஆசிரியர்கள் அதிபர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி பெற்ற தகவல்களை மையமாக வைத்தே மேற்படி கருத்துக்களை வெளியிடுகின்றோம். இக்கருத்துக்கள் எல்.ரி.ரி.ஈ யாலோ அல்லது வேறு எந்த அமைப்புக்களாலோ எம்மீது திணிக்கப்பட்ட கருத்துக்கள் அல்ல என்பதையும், நாம் ஓர் நீண்ட கால வரலாற்றை உடைய அரசியல் சார்பற்ற சுதந்திரமான ஆசிரிய தொழிற்சங்கம் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

தாங்கள் விரும்பின் மேற்படி விடயங்களை தங்களுடன் திறந்த மனத்துடன் கலந்துரையாடத் தயாராக உள்ளோம். ★

இனவாதத்தில் இருந்து மக்களை திசைதிருப்பி

# சமாதானத்திற்கான சரியான பாதையில் வழிநடத்தக் கூடியவர்கள் கலைஞர்களே!

## சாகித்திய விழாவில் சந்திரிகா

கொழும்பு, ஜன. 14

நாட்டில் சமாதான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதில், அரசியல்வாதிகளை விட கலைத் துறையில் உள்ளவர்கள் கூடுதல் சக்தியுள்ளவர்களாக விளங்குகிறார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மக்களை இலகுவில் இனவாதத்தில் இருந்து திசை திருப்பி அவர்களை சமாதானத்திற்கான சரியான பாதையில் வழி நடத்த முடியும்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சாகித்திய விழா பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலாசார வரலாறு பற்றி குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிகளின் போது பாதிக்கப்பட்டிருந்த எமது கலையையும் கலாசாரமும் நாடு சுதந்திரம் [illegible] மறுமலர்ச்சி அடைந்ததாகத் தெரிவித்தார்.

கலாசாரத்துக்கு புத்துயிர் அளிப்பதற்கு முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1956 இல் இருந்து பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

கலாசார விவகாரத்துக்கென அவர் அமைச்சு ஒன்றையும் தனியான திணைக்களம் ஒன்றையும் நிறுவினார். இதன் காரணமாக பெரும் எண்ணிக்கையான முன்னணிக் கலைஞர்கள் தமது பணிகளில் ஈடுபட்டார்கள்.

கடந்த இரு தசாப்தங்களின் போது நாட்டின் கலாசாரத்தில் பின்னடைவு ஏற்பட்டது என்றும், அரசியல் லாபம் கருதி பெரும் தொகைப்பணம் செலவிடப்பட்டது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் தாம் அரசியல்வாதியாக அல்லது [illegible] தலைவராக கலந்து கொள்ள வில்லை [illegible] ஆனால் ஓர் இலக்கிய ரசிகையாகவே கலந்துகொள்வதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ)

## 150 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி

தென்மராட்சி, ஜன. 14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த மாதங்களில் நடத்தப்பட்ட கண் பரிசோதனைகளின் போது தெரிவு செய்யப்பட்ட 150 பேருக்கு பொங்கல் பரிசாக மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த. நவரத்தினராசா தலைமையில் மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் நடைபெறும். [ஒ-117]

## கருத்தரங்கு

"சருமரோகமும் அதன் தடையும்" பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை 9-00 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு சருமரோகப் பிரிவு வைத்திய அதிகாரி திருமதி. எஸ். குயாபரன் கருத்துரை வழங்குவார். (ஒ-18)

## கோமாரியில் தபால்கள்

'கோமாரி' கப்பலில்எடுத்து வரப்படும் 288 தபால் பொதிகள் இன்று இறக்கப்படும் என்றும் —

இவை தரம்பிரிக்கப்பட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் என்றும்— யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோமேஸ்வரன் தெரிவித்தார்.

## ஆலயங்களில்

குருநகர் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த நவநாள் கொண்டாட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்று காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் திருச்சொரூப பவனி இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சற்பிரசாத ஆராதனை, சுற்றுப் பிரகாரம் என்பன நடைபெறும்.

ஆலயத்தின் நவநாள் ஆராதனை கடந்த 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. (ஐ 51)

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 14

ஜனவரி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக்கூட்டம் இன்று சனி இரவு 7 30 மணிக்கு திருநெல்வேலி பாரதிபுரம் ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்திலும், நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர்களின் கருத்துரைகளும், கலை நிகழ்ச்சிகளும் கூட்டத்தில் இடம்பெறும் (ஐ)

## நாளை

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர்தரக் கல்லூரியில் நடைபெறும்.

ஆய்வரங்கில் இந்துமத பீடாதிபதி சிவஸ்ரீ சாம்ப சிவசிவாச்சாரியார் "சோதிடம் கூறும் சமயதத்துவம்" என்ற பொருளில் ஆய்வுரை வழங்குவார். வழமையான தொடர் விரிவுரைகளும், பயிலரங்கும் நடைபெறும். (ஓ)

## திருநாள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் காரணமாக வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலய திருநாள் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருநாள் பெப்ரவரி 12 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 ஆம் திகதி ஞாயிறு காலை திருநாள் திருப்பலியுடனும் திருச்சுருபப்பவனி, ஆசீர்வாதத்துடனும் முடிவடையும். எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஓ)

## காமினி பொன்சேகா பதவியேற்பு

கொழும்பு, ஜன. 14

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக திரு காமினி பொன்சேகா நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வட மேல் மாகாண ஆளுநராக ஹெக்டர் அரம்பாவெல சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். (இ-3)

## ஊர்காவலர் சுட்டு கான்ஸ்டபிள் படுகாயம்

கொழும்பு, ஜன. 14

ஊர்காவற் படையினர் இருவரால் சுடப்பட்டு படுகாயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிகந்த பிள்ளையாரடிப் பொலிஸ் காவல் நிலையத்தைச் சேர்ந்த அனுர குமார என்ற கான்ஸ்டபிளே படுகாயமடைந்தவராவார்.

கடந்த புதன் இரவு 9.30 மணியளவில் பிரஸ்தாப பொலிஸ் கான்ஸ்டபிள் ஊர்காவல் படையினரை மேற்பார்வை செய்வதற்காகச் சென்ற சமயம் பதுங்கு குழி ஒன்றினுள் கடமையில் ஈடுபட்டிருந்த இரு ஊர்காவற் படையினர் அவர் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்துள்ளனர். இதனால் அவர் படுகாயமடைந்தார்.

அடையாளம் தெரியாத நிலையில் அவர் மீது தாம் சுட வேண்டி ஏற்பட்டதாக ஊர்காவலர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு ஜன 14

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் விஜயத்தை ஒட்டி கொழும்பு நகரில் பொலிஸார் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

பாப்பரசர் விஜயம் செய்யும் காலப்பகுதியில் கொழும்பு மாநகர மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை பொலிஸார் பொது மக்களுக்கு விநியோகித்து வருகின்றனர். (ஐ)

## பொங்கல் கலகலப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ் நகரில் தைப்பொங்கல் விற்பனை சூடுபிடித்து வருகின்றது.

யாழ். நகர் பெரிய கடை பகுதியிலும் திருநெல்வேலி கல்வியங்காடு பகுதிகளிலும் மக்களின் நெரிசல் அதிகரித்து காணப்படுகின்றது.

மக்கள் பொங்கல் பொருள்களையும் மற்றும் புதுப் பானை போன்றவற்றை வாங்க முண்டியடிப்பதையும் அவதானிக்க முடிகிறது. (ஒ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாக்கிறெட் நாச்சிப்பிள்ளை

காலஞ்சென்ற R V. கந்தையாவின் அன்பு மனைவி திருமதி மாக்கிறெட் நாச்சிப்பிள்ளை நேற்று (13-1-95) கர்த்தருக்குள் பகிலையடைந்துள்ளார்.

இவர் திரு. K. E. விஜயசிங்கராசா (இளைப்பாறிய ஆசிரியர், மீசாலை வடக்கு, கொடிகாமம்), காலஞ்சென்ற D. K. சிவரத்தினம் (லட்ரிமர் லொஜ், சாவகச்சேரி), திரு. K. N. துரைரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், ஏழாலை தெற்கு, சுன்னாகம்), திரு. V. K. S. நவரத்தினம் (பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி) திரு. K. V. K. யோகரத்தினம் (மெதடிஸ்த திருச்சபை, கட்டைவேலி, கரவெட்டி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகமணி, அன்னாறோச பெல்லா, ஜெயமணி, அரியமணி, மகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், லோகினி, காலஞ்சென்ற ஜெயரூபன், ஜெயகரன் (ஆசிரியர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெயநேசன் (போதகர், தென் இந்திய திருச்சபை, குடத்தனை) எபநேசர், சாந்தரூபன், நியோமி, அனுஷியா, நிரோஷன், திருமதி பிரிசில்லா ஆகியோரின் பேர்த்தியும், ஏஞ்சலா, ஹம்சத்வனி, தபீத்தா, ஆரபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் அந்திய கால ஆராதனை இன்று (14-01-95) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K.V.K. யோகரத்தினம்
(மகன்)

'இரத்தின வாசா'
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி,
(32708)

## அப்புக்குட்டி சின்னத்தம்பி

பட்டியோலை, உடுவில் தெற்கு, அப்புக்குட்டி சின்னத்தம்பி நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி முத்துப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், அருளானந்தன், சற்குணானந்தன் (குகன் ஸ்ரோர்ஸ் தலவாக்கொல்லை), விவேகானந்தன் (சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்), காலஞ்சென்ற செல்வராணி, மற்றும் சச்சிதானந்தன், பஞ்சானந்தன் (குகன் ஸ்ரோர்ஸ், தலவாக்கொல்லை) ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், தில்லையம்மா, பொன்னுத்துரை, மற்றும் சிவசம்பு, சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரரும், ச. சந்திரபாலன் (காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), பத்மாதேவி, செல்வராணி, யோகராணி, சாந்தினி, சிவமணி ஆகியோரின் மாமனாரும், ரதிகலா, சசிகலா, விசிகலா, மதிகலா, நாகசொரூபன், சிவகலா, காலஞ்சென்ற ஜெகஜீவன், ஜெகஜீவா, ஜெசசீலன், ஜெகதாசன், ஜெகமோகன், காலஞ்சென்ற ஜெகந்தினி, சிவானந்தன், சுதர்சன், சசிகரன், சிந்துஜா, சுகன்யா, சுகேஸ், ரஜீவி, ரஜீவ், ரஜித்தா, ரம்மியா, ராகுலன், திசங்கா, நிரோஜா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 14-01-95 நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சற்குணானந்தன்
(மகன்)

புஷ்பராசா வீதி,
உடுவில் தெற்கு.
(34712)

## திருமதி மாகிறேட் ஜேம்ஸ்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் ஆசிரியையுமான திருமதி மாகிறேட் ஜேம்ஸ் அவர்கள் கோடைக்கானலில் (இந்தியா) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் (முன்னாள் அதிபர் புனித வளனார் கல்லூரி, மாதகல்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயநாதன், காலஞ்சென்ற அருமைநாதன், மற்றும் திரு. திலகநாதன், திருமதி வசந்தி அத்தனாசியார், திரு. குணநாதன், திருமதி றஞ்சினி சாமிநாதர், திருமதி மல்லிகா வென்சேஸ்லோஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி அக்னெஸ் இன்னாசித்தம்பி, அருட்செல்வி அக்னெஸ் சந்தியாப்பிள்ளை (கன்னியர்மடம், பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிறீமாறட்னமணி (மணி), யூவ்றேஷியா (ராசாத்தி), நீனி, அல்போன்சஸ், போல் சாமிநாதர், வென்சேஸ்லோஸ் ஆகியோரது பாசமுள்ள மாமியாருமாவார்.

அன்னாரது நல்லடக்கம் கோடைக்கானல், இந்தியாவில் 13-1-95 மாலை நடைபெற்றது என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
அல்போன்சஸ் அத்தனாசியார்

372, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(34714)

## சுவாம்பிள்ளை இராசேந்திரம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை இராசேந்திரம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை அன்னம்மா [பிள்ளை] தம்பதிகளின் அன்பு மகனும், றோசலீனின் அன்புக் கணவரும், திருமதி சுசிலா யோசவ், இம்மானுவல் (ஜேர்மனி), திருமதி சித்திரா குணரெட்ணம் [நோர்வே], மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இம்மானுவல் யோசவ் (முன்னாள் எம்.டி. குணசேனா காசாளர்), திருமதி சாவித்திரி, போல் குணரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஞானப்பிரகாசம், பொன்மணி, பற்றிக், யேசுதாசன், மரியநாயகம், மாட்டீன், றோஸ்மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அந்தோனிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும், சுபாஷினி, சுதர்சன், யூடினி, ஜெனிபர், ஸ்ரெபான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல 66, பழைய பூங்கா வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் இருந்து இன்று சனிக்கிழமை (14-1-95) மாலை 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இம்மானுவல் யோசவ்

இல 66, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(34699)

---

சரணம் ஐயப்பா
சண்டிலிப்பாய் வேலிற்பதி
ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார்
தேவஸ்தானம்

# மகரஜோதிப் பெருவிழா

15-01-95 ஞாயிறு பகல் 12.00 மணி முதல்
108 கலசாபிஷேகம், விசேடபூஜை

மாலை 4.30:
சிறப்புச் சொற்பொழிவு
திரு. இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்)
திரு. ஆறு. திருமுருகன் (கம்பன் கழகம்)

மாலை 5.30:
திருவிளக்குப் பூஜை,
18 படி பூஜை
ஸ்ரீஐயப்பன் வீதியுலா

உபயகாரர்

(34719)

---

JAFFNA COLLEGE · CEYLON

## யாழ்ப்பாண கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

க. பொ. த. உயர்தரம் உயிரியல்
## துரித மீட்டல் பயிற்சி நெறி

கிழமை நாட்களில் காலை 8-45 மணி முதல் பிற்பகல் 1-15 மணி வரை வகுப்புக்கள் அனுபவம் பெற்ற பிரபல ஆசிரியர் குழுவால் நடத்தப்படும். வினா-விடைகளும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படுவதோடு, செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படும்.

மிகச் சொற்ப அளவிலான மாணவர்களே வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவர். விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட க. பொ. த. (உயர்தர) பெறுபேறுகளுடன் 25-01-1995 புதன் கிழமைக்கு முன்னதாக அனுப்பவும்.

பயிற்சிக் காலம்: ஆறு மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 1,200/-

— இயக்குநர்.

[சி-280]

---

திருநெல்வேலி கிழக்கு
வாலை அம்மன் சனசமூக நிலையத்தின்
53 ஆவது ஆண்டு விழாவை
முன்னிட்டு

## கண்காட்சி [புகைப்படம், ஓவியம், கைப்பணி]

இடம்: யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
காலம்: 14, 15-01-95
சனி, ஞாயிறு

அனைவரும் திரண்டு வருக
நிர்வாகத்தினர்

வா. அ. ச. ச. நிலையம்.
இராமலிங்கம் வீதி.

விளம்பர உதவி:
அஜந்தா கலைப் பூங்கா
63, சங்கிலியன் வீதி, நல்லூர். (34717)

---

LECTURE: ON RECENT ADVANCES IN RADIOLOGY
By
**DR. R. DEVAKUMAR**
M R C P, FRCR (U K)
**Consultant Radiologist**
**George Eliod Hospital,**
**Warwickshire**
**United Kingdom.**

VENUE: NURSES TRAINING SCHOOL, G H JAFFNA.
TIME : 6 p.m.
DATE : 16th January, 1995.

**Dr. T. Rajajane,**
Hony. Secretary,
J M A

[8198]

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் S. அருளானந்தம்
[உரிமையாளர், மரியா ஹோட்டல், யாழ்ப்பாணம்]

எமது சங்க ஆரம்பகால உறுப்பினரும், நிர்வாக சபை உறுப்பினருமாகிய மறைந்த அமரர் S அருளானந்தம் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 4 00 மணிக்கு நடைபெறவுள்ளதால் எமது சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்

(சி/ 167)

---

## றோட்டறக்ட் ஆண்டு விழாவும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ் மிட்ரவுண் றோட்டறக்ட் கழகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய மண்டப திறப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கள் முற்பகல் 9 45 மணிக்கு நடைபெறவுள்ளன.

இல. 83 கோவில் வீதி நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள புதிய மண்டபம் அன்றைய தினம் திறந்து வைக்கப்படும்.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழகத்தின் தலைவர் — றோட்டேரியன் ஈ. சரவணபவன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ பாலசிங்கம், யாழ். வட்ட பொறுப்பாளர் திரு. பொ. செந்தமிழன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 14

திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழாவை ஒட்டிய கண்காட்சி நிகழ்வு இன்றும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

விடுதலைப் போராட்ட வரலாற்று நிகழ்வுகளை சித்திரிக்கும், புகைப்படங்கள், கிராமிய மக்களின் கைவினை ஆக்கங்கள் அந்தக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. சிவலிங்கராஜா இன்று காலை 9.30 மணிக்கு கண்காட்சியை தொடக்கி வைப்பார். (ஐ)

## நல்லூரில் இலக்கிய அரங்கம்

யாழ்ப்பாணம். ஜன. 14

நல்லைத் தமிழ்ச் சங்கம் வழங்கும் ஆறாவது இலக்கிய அரங்கம் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை கவிஞர் விடிவெள்ளி அரங்கில் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

கவிஞர் வே. ஞானகாந்தன் அரங்கிற்கு தலைமை வகிப்பார். இளங்கவிஞர்கள் பங்கு கொள்ளும் கவியரங்கம், பட்டிமன்றம் என்பன அதில் இடம் பெறும். (ஐ)

## கரவெட்டி விக்னேஸ்வரா பவள விழா

வடமராட்சி, ஜன. 14

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பவளவிழா இன்று முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது

இன்றையமுதல் நாள் நிகழ்வாக கலைவிழா இடம் பெறும். பிரதமவிருந்தினராக யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்து கொள்வார். (ஐ-173)

---

### வடபகுதியை...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு வருவது—

தேசிய சொத்துக்களை பேணுவது—

அரசாங்க நிர்வாகத்தை வலுப்படுத்துவது மக்களுக்கு உணவுப் பொருள்களை தங்கு தடையின்றி வழங்குவது—

பாதுகாப்பை அளிப்பது— என்பன இந்த திட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

### பூநகரிப்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளான பிரிகேடியர் ஏ. எவ். சிறிபீரிஸ், கப்டன் பிரசன்னா ராஜரட்ன மற்றும் இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம், கட்டடக்கலை நிபுணர் திரு. நவீன் குணரட்ண ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாலையில் பேச்சு முடிந்த கையோடு அரசதரப்பு குழுவினர் ஹெலிகொப்டரில் புறப்பட்டுச் செல்வர்.

வடபகுதியை புனரமைப்பு செய்வதற்கான திட்டங்கள் குறித்து இன்றைய மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் —

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்துவது பற்றியும் பிரஸ்தாபிக்கப்படும் என்றும் —

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கொழும்பில் தெரிவித்தார். (இ-ஐ-3)

---

வடக்கு - கிழக்கு பிரதேச
சமூகசேவைகள்
## அலுவலர்கள் சங்கம்

15-01-1995 இல் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவிருந்த மேற்படி சங்க வருடாந்தக் கூட்டம் 16-01-1995 [திங்கள்] காலை 10 மணியளவில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறும். தயவுசெய்து அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

தி. கிருபாகரன்
செயலாளர்.

(7864)

---

மகளிருக்கான
மனைப் பொருளியல் கைத்திறன்
## பயிற்சிகள்

★ கேக் ஐசிங்
★ கோலம்
★ பூ வேலை
★ கை வேலை
★ தையல்
★ சிற்றுண்டி தயாரித்தல்
★ சிகை அலங்காரம்

பயிற்சிகள் ஆரம்பம்: 16-01-1995
திங்கட்கிழமை 2-30 மணி
பயிற்சிகள் இலவசம்

தொடர்புகளுக்கு:
**மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
7, சயந்த சிறி வீதி,
வண்ணார்பண்ணை,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[34707]

---

# மரண அறிவித்தல்கள்

## ச. அருளானந்தம்
(யாழ். மரியா ஹோட்டல் உரிமையாளர்)

ச. அருளானந்தம் அவர்கள் 10-01-95 இல் இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை (சிறைச்சாலை அதிபர், கண்டி) - ஆனாசி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான யோனிஸ்மரியாம்பிள்ளை - எலிசம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயமணி நீற்றாவின் அன்புக் கணவரும், அ. ஜெயராஜா அருளானந்தம் (ராஜன் லண்டன்), ஜெயராணி (நோர்வே) பத்மா (லண்டன்), ரோஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பம் (லண்டன்), மனுவல் பிள்ளை (நோர்வே), டாக்டர் கிறிஸ்தோத்திரம் (லண்டன்), ஞானநாயகம் [நோர்வே] ஆகியோரின் அன்பு மாமனாரும், மொனிக்கம்மா, அந்தோனியாப்பிள்ளை, திரேசம்மா, மாசில்லா ஆகியோரின் அருமைச் சகோதரனும், டாக்டர் ஜெயரட்ணம்- மனைவி கமலா (லண்டன்), அந்தோனிப்பிள்ளை - மைக்கல் ராஜ், காலஞ்சென்றவர்களான யோகராணி, எஸ்தாகி, அருள்ராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-01-95) மாலை 4 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ். பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கூட்டுத் திருப்பலியின் பின் யாழ் மரியாள்சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
அருட்திரு. அ. ம. ஸ்ரீபன்
(செ. தா. சபை)

மரியா ஹோட்டல்
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(34718)

## கனகசபை இராசம்மா
(இராசமுத்து)

வசாவிளானை பிறப்பிடமாக கொண்டவரும் புத்தூரில் வசித்தவருமான திருமதி கனகசபை இராசம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், கேதாரசிங்கம் (கராஜ் உரிமையாளர்), அமரசிங்கம் (ப. நோ. கூ. ச. தெல்லிப்பழை), காலஞ்சென்ற ஏலேலசிங்கம், மற்றும் சிவதாசசிங்கம் (பிரான்ஸ்), குகதாசசிங்கம், இந்துமதி, காராளசிங்கம் (மகாஜனக் கல்லூரி — ஆசிரியரும், பலாலி ஆசிரியக் கலாசாலை ஆசிரிய மாணவரும்), தனபாலசிங்கம் (தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிப்பிள்ளை, புஷ்பதேவி (ஆசிரியை வாதரவத்தை விக்னேஸ்வரா), சத்தியபாமா, இராசலட்சுமி, சண்முகரட்டினம் (ஆசிரியர் - அச்சுவேலி மகா வித்தியாலயம்), வடிவாம்பிகை, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசதுரையின் அன்புச் சகோதரியும், சர்மிளா, பிரதீபன், சயந்தன், சுஜனன், ஜெயலக்சுமி, சுதாகர், கேதாரகௌரி, சதீஸ்குமார், கிரி, கிருபா, நந்தினி, கஜேந்தினி, கஜீபன், சுஜீவன், பிரணவன், தாட்சாயினி, சுபராம், கஜராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புத்தூர் படையர் வளவிலிருந்து புத்தூர் இந்திட்டி மயானத்திற்கு 14-1-1995 இன்று மதியம் 12 மணியளவில் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கேதாரசிங்கம்
க. அமரசிங்கம்
(பிள்ளைகள்)

புத்தூர் மேற்கு,
புத்தூர்.
(34715)

## இளையதம்பிஐயர் தம்பித்துரைஐயர்

உடுப்பிட்டியைச் சேர்ந்த இளையதம்பிஐயர் தம்பித்துரைஐயர் நேற்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் உடுப்பிட்டி, பண்டகைப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம அர்ச்சகரும், த. இளையதம்பிஐயர் தங்கம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், கண்மணியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரஐயரின் (இளைப்பாறிய விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்) அன்புத் தந்தையும், மனோகரதேவியின் அன்பு மாமனாரும், பாலமுருகன், பாலசேந்தன், அனுசூயா, தங்கப்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [14-1-95] காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[மகன்]

பண்டகை,
உடுப்பிட்டி.
[34716]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 193/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org